# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www. tnerc.gov.in

**முன்னிலை: திரு.ஆ.தர்மராஜ், மின் குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண். 21 / 2012**

திரு.எம். ராஜேஸ்,
இளம்பாலவிளை,
பயணம்,
உண்ணாமலைக் கடை அஞ்சல் – 629179
குமரி மாவட்டம். ....... மேல் முறையீட்டாளர்

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
கன்யாகுமரி மின்பகிர்மானவட்டம்,
தமிழ்நாடு உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நாகர்கோவில். ........எதிர்மனுதாரர்

**கேட்புரை நாள் 17.7.2012 & 20.9.2012**

**ஆணை நாள் : 16 .10. 2012**

1. திரு எம்.ராஜேஸ், இளம்பாலவிளை அவர்களின் 14.5.2012 மனுவானது மேல் முறையீட்டு மனு எண்.21 / 2012 ஆக பதிவு செய்யப்பட்டது.

2. மேல் முறையீட்டாளர், 17.2.2012 அன்று கன்னியாகுமரி மின்பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு தன்னுடைய மின் இணைப்பு எண் 181–002–2193 ல் மின் இணைப்பு வழங்கியதில் உள்ள முறைகேடுகள் சம்பந்தமாக மனு அளித்தும், நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்ற காரணத்தினால் மின் குறை தீர்ப்பாளரிடத்தில் மனு ஒன்றை அளித்துள்ளார். அதில் அவரின் கோரிக்கைகளாக கீழ்கண்டவற்றை தெரிவித்துள்ளார்.

i) தன்னிடம் கடிதங்களைப் பெற மறுத்து ஒழுங்கீனமாகச் செயல்பட்ட உதவிப் பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் மீது நடவடிக்கை தொடர உத்தரவிடுமாறும்,

ii) அவரின் புகாரின் மீது முறையான செயல்பாடு மேற்கொள்ளாததற்கு standards of performance rules படி உரிய நஷ்ட ஈடு வழங்கவும்,

iii) வீட்டு வீதப்பட்டியில் மின் இணைப்பு வழங்கிவிட்டு, பின்னர் விதிகளுக்குப் புறம்பாக செய்த மாற்றத்தினை ரத்து செய்யவும்.

iv) வணிக வீதப்பட்டியில் அவரிடம் வசூலித்த மின் கட்டணத்தை வட்டியுடன் திருப்பித் தரவும்,

v) பழுதடைந்ததாகச் சொல்லப்படும் மின் அளவிக்குப்பதிலாக புதிய மின் அளவி குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் பொருத்தப்படாததற்கு உரிய நஷ்ட ஈடு வழங்கவும்,

vi) முறைகேடாகச் செய்யப்பட்ட வீதப்பட்டி மாற்றத்தை திருத்தியமைக்க அவரிடம் பெற்ற கட்டணத்தை வட்டியுடன் திருப்பித்தரவும்,

vii) இருமுறை மன்றத்திற்கு அளித்த முறையீட்டிற்கு நடவடிக்கை எடுக்காததற்கும், நீண்ட காலமாகத் தொடர்ந்து வேண்டுமென்றே அவருக்கு இன்னல்கள் தந்து ஒழுங்கீனமாகச் செயல்பட்ட அனைத்து அலுவலர்கள் மீதும் உரிய நடவடிக்கைக்கு உத்தரவிடுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

3. மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்சார குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகள் 2004 ன் விதி 17(4) அ வின்படி மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் மனு பதிவு செய்து இரண்டு மாதங்களுக்குள் பதில் எதுவும் பெறாவிட்டால் மின் குறைதீர்ப்பாளர், புகார் மனுவை ஏற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. மனுதாரர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு மனு செய்தது 17.2.2012 என்று தெரிவித்துள்ளார். மின் குறைதீர்ப்பாளரிடம் குறை தீர்க்கும் மன்றத்திலிருந்து பதில் எதும் இல்லை என்று மனு செய்த தேதி 14.5.2012. மனுதாரர் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், கன்னியாகுமரி மின்பகிர்மான வட்டத்திற்கு மனு செய்து 2 மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டதால் மேற்கண்ட மனு மின்குறைதீர்ப்பாளரிடம் மேல்முறையீட்டு மனு எண். 21/2012 ஆக பதிவு செய்யப்பட்டது.

5. மேல் முறையீட்டாளரின் மனுவின் நகல் எதிர் மனுதாரருக்கு சார்வு செய்யப்பட்டு எதிர் மனுதாரரின் பதிலுரை பெறப்பட்டது.

6. எதிர்மனுதாரர், தன்னுடைய பதிலில் குறைதீர்க்கும் மன்றத்திற்கு மனுதாரர் அனுப்பிய 17.2.2012 ன் மீது 19.4.2012 அன்று விசாரணை நடத்தப்பட்டு 28.4.2012 அன்று நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் தீர்ப்பு அனுப்பப்பட்டுவிட்டது என்று தகவலையும் தெரிவித்து

உள்ளார். மேலும் மனுதாரர், மேற்படி நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் நடத்திய விசாரணையில் கலந்துகொள்ள தகவல் தெரிவித்தும், அவர் அந்த விசாரணையில் கலந்து கொள்ளவில்லை என்ற தகவலையும் தெரிவித்துள்ளார்.

7. மேல் முறையீட்டாளரும், எதிர் மனுதாரரும் அவர்களின் வாதங்களை நேரில் பதிவு செய்வதற்கு வசதியாக 17.7.2012 மற்றும் 20.9.2012 ஆகிய நாட்களில் கேட்புரை நடத்தப்பட்டது.

8. 17.2.2012 அன்று நடந்த கேட்புரையில், மேல் முறையீட்டாளரின் சார்பில் திரு. சி.செல்வராஜ் அவர்களும், எதிர் மனுதாரர் சார்பில் குழித்துரை செயற்பொறியாளர் திரு. குளத்தூரான், அவர்களும் கலந்து கொண்டு, தங்கள் வாதங்களை எடுத்துரைத்தனர்.

9. 20.9.2012 அன்று நடந்த கேட்புரையில், மேல் முறையீட்டாளர் சார்பில் திரு. குழித்துரை செயற் பொறியாளர் குளத்தூரான், அவர்களும், இளநிலை பொறியாளர் திரு. ஆர். முருகேசன், அவர்களும் கலந்து கொண்டனர்.

10. 20.9.2012 அன்று நடந்த கேட்புரையின் பொழுது மனுதாரரின் சார்பில் கலந்து கொண்ட திரு. சி.செல்வராஜ் அவர்கள் மேல்முறையீட்டாளர் மேல் முறையீட்டு மனுவை விலக்கிக் கொள்ள இருப்பதாக தெரிவித்து இது சம்பந்தமாக மேல் முறையீட்டாளரின் மனுவை சமர்ப்பிப்பதாக கூறினார். அவர் தெரிவித்ததற்கு இணங்க 24.9.2012 நாளிட்ட மனுவை திரு எம். ராஜேஸ் அவர்கள் அனுப்பியுள்ளார் அதில் அவர் கீழ் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

> *"1. 17.3.2011 அன்று எனக்கு வழங்கப்பட்டதாகச் சொல்லப்பட்ட கடிதம் எனக்கு வழங்கப்படவில்லை. அக்கடிதம் ஒருவார காலத்திற்குப் பின்னர் தான் தயாரிக்கப்பட்டதாகவும் அனுப்புகைப் பதிவேட்டில் இடைச்செருகலாகப் பதிவு செய்யப்பட்டதும் எதிர்தரப்பால் ஒப்புக்கொள்ளப்பட்டது,*
>
> *1. குறைதீர்க்கும் மன்றத்தில் விசாரணை நடைபெற இருப்பதாக 12.4.2012 அன்று எனக்கு அனுப்பப்பட்டதாகச் சொல்லப்பட்ட கடிதம் மற்றும் விசாரணை முடிவு உத்தரவு 28.4.12 அன்று எனக்கு அனுப்பட்டதாகச் சொல்லப்பட்ட கடிதமும் எனக்கு வழங்கப்படவில்லை. மேலும் இந்த இரு கடிதங்களும் எனக்கு அனுப்பட்டதாகவும் பதிவேடுகளில் முறைகேடாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதும் உறுதிசெய்யப்பட்டது.*
>
> *2. எனக்கு மின் இணைப்பு வழங்கியதில் முறைகேடு மற்றும் அதன் மீது கொடுக்கப்பட்ட முறையீடு மீது குறைதீர்க்கும் மன்றமும் முறைகேடாகச் செயல்பட்டு எனக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பது இதனால் உறுதியாகிறது.*

*3.* *மேற்கண்ட தவறு மற்றும் முறைகேடுகளை உணர்ந்த எதிர் தரப்பு எனக்கு ஏற்படுத்திய இழப்புகளை ஈடுகட்டி, நிகழ்வுகளுக்கும் வருத்தம் தெரிவித்துள்ளதால் இந்த வழக்கினை மேலும் நடத்தாமல் மேல் முறையீட்டினை தற்போதைய நிலையிலேயே முடித்து வைக்குமாறு மின்குறை தீர்ப்பாளரை அன்புடன் வேண்டுகிறேன்."*

11. மேலும், மேல்முறையீட்டாளர் தன்னுடைய 1.10.2012 நாளிட்ட கடிதத்தில் மேல்முறையீட்டு மனுவை வாபஸ் பெற்றுக்கொண்டேன் என்று தெரிவித்துள்ளார்.

12. மேல் முறையீட்டாளர் எதிர்தரப்பு அவருக்கு ஏற்படுத்திய இழப்புகளை ஈடுகட்டி நிகழ்வுகளுக்கும் வருத்தம் தெரிவித்துள்ளதால் தன்னுடைய வழக்கினை மேலும் நடத்தாமல், தற்போதைய நிலையிலேயே முடித்து வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு மேல்முறையீட்டு மனுவை வாபஸ் பெற்றுக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளதால் மேற்கூறிய மனு எண். 21/2012 தள்ளுபடி செய்யப்படுகிறது.

**(ஆ. தர்மராஜ்)**
மின் குறைதீர்ப்பாளர்

பெறுநர்

1. திரு. எம். ராஜேஸ்,
இளம்பாலவிளை,
பயணம்,
உண்ணாமலைக் கடை அஞ்சல் –629 179
குமரி மாவட்டம்.

2. மேற்பார்வை பொறியாளர்,
கன்யாகுமரி மின்பகிர்மானவட்டம்,
தமிழ்நாடு உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நாகர்கோவில்.

3. தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி வளாகம்
அண்ணாசாலை, சென்னை – 2.

4. செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மணி லட்சுமிபதி சாலை
சென்னை – 600 008.

5. உதவி இயக்குநர் (கணினி) **– இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மணி லட்சுமிபதி சாலை
சென்னை – 600 008.